.



**Spl.CC.No.80/2019**

**27-11-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.10** சந்திரமௌழி மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

**28.11.2011** ஆம் தேதி நான் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் காவல் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது எனக்கு அடுத்த உயர் அதிகாரி யார் என்றால் மேற்கு சரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் கண்காணிப்பாளர் ஆவார்**.** மேற்கு சரக ஊழல் தடுப்பு மற்றும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் எங்கு உள்ளது என்றால் சென்னையில் உள்ளது**.** உயர் அதிகாரியிடமிருந்து இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எழுத்து பூர்வமாக உத்திரவு வந்ததா என்றால்**,** இல்லை**.** வாய்மொழி அறிவுறுத்தல் வரப்பெற்றது**.** கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் காவல் கண்காணிப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து எனது உயர் அதிகாரிக்கு இவ்வழக்கு தொடர்பாக எழுத்துபூர்வமான வேண்டுதல் கடிதம் ஏதும் அனுப்பப்பட்டதா என்றால்**,** அது குறித்த விவரம் எனக்குத் தெரியாது**. Ex.P.10** அங்கீகாரக் கடிதத்தை நான் வாங்கும்பொழுது இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலை வாங்கினேனா என்றால் இல்லை**.** ஆனால் அதை நான் படித்துப்பார்த்தேன்**. 28.11.2011** அன்று நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திற்குச் செல்லும்போது என்னுடன் யார்**,** யார் வந்தார்கள் என்றால்**,** நான்**,** காவல் ஆய்வாளர்கள் செல்வகுமார் மற்றும் ரங்கராஜன் ஆகியோர்களும் மற்றும் காவலர்களும் வந்தார்கள்**. Ex.P.10** அங்கீகாரக்கடிதத்தை நான் பெற்றுக் கொண்டேன் என்பதற்கு **Ex.P.10** ஆவணத்தில் மேலெழுத்து எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான்**. Ex.P.10** அங்கீகாரக்கடிதத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி சோதனை மேற்கொள்ளப்படவேண்டுமென குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்**. Ex.P.10** ஆவணத்தில் இவ்வழக்கிற்கு தொடர்புடைய கருபொருள் ஆவணங்கள் மற்றும் சான்றுகளை சோதனையின்போது கைப்பற்றவேண்டுமென சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்**.** சோதனையின்போது உடனிருந்ததாகச் சொல்லும் சாட்சிகள் முனுசாமி**,** அறிவழகன் ஆகியோர்களை நான் அழைத்து அவர்கள் வரவில்லை என்றால் சரிதான்**.** மேற்படி சாட்சிகள் முனுசாமி**,** அறிவழகன் ஆகியோர்கள்

.



சோதனை செய்யப்படவேண்டிய கல்லூரி அமைந்துள்ள ஊர் மற்றும் கிராமத்தைச் சார்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். **Ex.P.10** அங்கீகாரக் கடிதத்தில் சோதனை செய்யப்படவேண்டிய இடம் என கலைஞர் கருணாநிதி இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலிஜி என்ற அலுவலகத்தை சோதனையிடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கல்லூரி யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது, யாருக்கு உரிமைப்பட்டது என்பது தொடர்பான ஆவணங்கள் எதையும் பார்த்தேனா என்றால், சோதனையின்பொழுது அறக்கட்டளை ஆவணத்தைப் பார்த்தோம். அந்த ஆவணத்தில் மேற்படி அறக் கட்டளையின் தாளாளர், அறங்காவலர்கள் ஆகியோர்களைப் பற்றி விவரம் இருந்தது.

<u>கேள்வி</u> அவ்வாறு எந்த ஆவணத்தில் மேற்கண்ட விவரம் இருந்தது என்றால், சோதனை பட்டியலில் **1** வது மற்றும் **2** வது ஆவணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் அந்த விவரம் இருந்தது. சாட்சி தொடர்ந்து கூறுகிறார், மேற்படி கல்லூரியின் தாளாளர் டாக்டர் வித்யா கோகுல் என்பவர் மேற்படி விவரங்களை சோதனையின்போது தம்மிடம் தெரிவித்ததாகவும் கூறுகிறார். கல்லூரியின் உரிமையாளர் என்று யாரது பெயரில் அந்த ஆவணத்தில் இருந்தது என்றால், **Founder chairman Thiru.Palanisamy, Chairman** பைந்தமிழ்பாரி, மற்றும் அறங்காவலர்கள் பெயர்கள் இருந்தன. ஆவணத்தைப் பார்த்தால் என்னால் சரியாகச் சொல்ல முடியும். மேற்படி கல்லூரி எந்த கிராமத்திற்குள் இருக்கிறது என்றால், கண்ணம்பாளையம் கிராமத்திற்குள் உள்ளது. கண்ணம்பாளையம் கிராம நிர்வாக அலுவலரை இவ்வழக்கிற்காக சாட்சியாக இருப்பதற்கு அழைத்தேனா என்றால், இல்லை. என்னோடு வந்த மற்றொரு சாட்சி எந்த கிராம நிர்வாக அதிகாரி என்றால், ஒட்டர்பாளையம் கிராம நிர்வாக அதிகாரியாவார். ஒட்டர்பாளையம் கிராம நிர்வாக அதிகாரி கண்ணம்பாளையம் கிராம நிர்வாக அதிகாரி அல்ல என்றால் சரிதான். சோதனை செய்யும் கல்லூரி அமைந்துள்ள பகுதியில் வசித்துவரும் மதிப்புமிகு நபர்களை சோதனையின்போது சாட்சியாக நிற்குமாறு நான் அழைத்தேனா என்றால், அழைக்கவில்லை. ஏற்கனவே இரண்டு மதிப்புமிகு சாட்சிகள் என்னுடன் வந்திருந்ததால் அவ்வாறு அழைக்கவில்லை. என்னுடன் வந்திருந்த இரண்டு சாட்சிகளும் அரசு ஊழியர்கள் என்றாலும், அவர்கள் வெவ்வேறு அரசு துறையைச் சார்ந்தவர்கள் என்றாலும் சரிதான். என்னுடன் வந்த சாட்சிகள் மதிப்புமிகு சாட்சிகள் என நான் எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால், என்னுடன் வந்த சாட்சிகளில் ஒருவர் உதவி தோட்டக்கலை அலுவலர் ஆவார் மற்றொருவர் கிராம நிர்வாக அலுவலர் ஆவார். இருவரும் பொறுப்புவாய்ந்த பதவியை வகித்து வந்த அலுவலர்கள் என்பதால் நான் அவர்களை மதிப்புமிகு சாட்சிகள் எனச் சொல்கிறேன். என்னுடன் சாட்சியாக வந்த இரு சாட்சிகளும் அரசு ஊழியர்கள் மட்டுமே என்றும், அவர்கள் மதிப்புமிகு, பொறுப்புமிகு சாட்சிகள்

.



என்றால் சரியல்ல. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி சோதனையின்பொழுது பொறுப்புமிக்க, மதிப்புமிக்க உள்ளூரில் வசிக்கும் சாட்சிகள் எவரையும் சோதனையின்பொழுது சாட்சியாக அழைக்கப்படாததால் நான் மேற்கொண்ட சோதனை சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபொழுது நான் அவர்களிடம் **44** ஆவணங்கள் சோதனையின்பொழுது கைப்பற்றப்பட்டதாகச் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையின்பொழுது நான் அந்த **44** ஆவணங்கள் என்ன, என்ன ஆவணங்கள் என்பது பற்றி விவரங்களை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் பட்டியலை நான் கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட்டேன். அந்த பட்டியலில் அவ்விவரங்கள் உள்ளன. முதல் விசாரணையில் **36** ஆவணங்கள் தனியாக கைப்பற்றியதாகவும், வங்கி பாஸ் புத்தகங்கள் **6-**ம், பீரோவிலிருந்து **8** ஆவணங்களும் கைப்பற்றினேன் என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அது வாய் தவறுதலாக நான் சொல்லியிருக்கிறேன். வங்கி பாஸ் புத்தகங்கள் எண்ணிக்கை **6** ஐ நான் டாக்டர் வித்தியா கோகுல் அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன். எனது முதல் விசாரணையில் **17** செக் புத்தகங்களை சோதனையின்போது எடுத்து அதன் எண்களை குறித்துக் கொண்டு திருப்பிக் கொடுத்துவிட்டேன். சோதனையின்போது **5** வாகனங்களின் பதிவு சான்றிதழ்களின் புகைப்பட நகல்களை கைப்பற்றினேன். பாஸ் புத்தகங்களின் புகைப்பட நகல்களை ஏன் வாங்கவில்லை என்றால், பாஸ் புத்தகங்களின் எண்களைக் குறித்துக் கொண்டதால் புகைப்பட நகல்களை வாங்கவில்லை. அதேபோல் காசோலை புத்தகங்களின் புகைப்பட நகல்களை ஏன் வாங்கவில்லை என்றால், காசோலை புத்தகங்களின் எண்களை குறித்துக் கொண்டதால் புகைப்பட நகல்கள் தேவையில்லை. **6** பாஸ் புத்தகங்கள் யார், யாரது பெயரில் இருந்தன என்றால், அது குறித்து மகசரில் குறிப்பிட்டுள்ளேன். **17** செக் புத்தகங்கள் யாரது பெயரில் உள்ளது என்பது பற்றி மகசரில் குறிப்பிட்டுள்ளேன். வாகனங்களின் பதிவு எண்ணை குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அந்த வாகனத்தின் உரிமையாளர் பற்றிய விவரத்தை நான் குறிப்பிடவில்லை. அந்த வாகனங்கள் கல்லூரி மாணவர்களை கல்லூரிக்கு அழைத்து வரவும், அழைத்துச் செல்லவும் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் எனக் குறிப்பிட்டுள்ளேன். பதிவுச் சான்றிதழின் புகைப்பட நகலை கைப்பற்றும்பொழுது அந்த வாகனங்கள் கல்லூரிக்கு உரிமைப்பட்ட வாகனங்கள் என என்னிடம் சொன்னார்கள். சோதனை ஜாபிதா மற்றும் மகசரை யார் எழுதினார்கள் என்றால், என்னுடன் உடன்வந்த கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில்

.



பணிபுரியும் ஆய்வாளர் சுந்தர்ராஜன் என்பவர் நான் சொல்லச் சொல்ல எழுதினார். ஆய்வாளர் சுந்தர்ராஜன் சோதனை ஜாபிதா மற்றும் மகசரில் கையொப்பம் எதுவும் இடவில்லை என்றால் சரிதான். நான் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் எதிலும் திரு.பொங்கலூர் பழனிசாமியின் பெயர் காணப்படவில்லை என்றால் ஆவண எண்.**1,2-**ல் திரு.பொங்கலூர் பழனிசாமியின் பெயர் இருந்ததாக எனக்கு நினைவில் உள்ளது. மேலும் ஆவண எண்.**20** லும் திரு பொங்கலூர் பழனிசாமியின் பெயரில் ஒரு கிரையப் பத்திரம் உள்ளது. அந்தக் கிரையப் பத்திரம் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வேறு ஆவணங்களில் பொங்கலூர் பழனிசாமியின் பெயர் காணவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள், சான்றுகள் என எவ்வாறு தேர்ந்தெடுத்தோம் என்றால், பெரும்பாலான ஆவணங்கள் திரு பொங்கலூர் பழனிசாமியின் மனைவி திருமதி விஜயலட்சுமியின் பெயரிலும் மற்றும் உறவினர்களின் பெயரிலும் இருந்தன. பொதுவாக சொத்து குவிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் உறவினர்களது பெயரில் உள்ள ஆவணங்களையும் கைப்பற்றி புலனாய்வு செய்வது நடைமுறையாகும். சோதனையின்பொழுது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் தவிர கல்லூரி சம்மந்தப்பட்ட வேறு ஆவணங்கள் இருந்தன. எவ்வளவு ஆவணங்கள் கல்லூரி சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என்றால், அவை நிறைய இருந்தன. அவற்றை எண்ண இயலாது. சோதனையின்பொழுது மொத்த ஆவணங்களையும் பார்த்து அதிலிருந்து தேர்வு செய்து கைப்பற்றினேனா என்றால், சோதனையின்பொழுது வழக்கிற்கு தொடர்புடையதாக கருதும் ஆவணங்களை மட்டுமே கைப்பற்றினேன். மொத்த ஆவணங்களையும் சோதனை செய்து, அதிலிருந்து **44** ஆவணங்களை தேர்ந்தெடுத்ததாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். **Ex.P.11** மற்றும் **Ex.P.12** ஆகியவைகள் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், நான் சோதனைக்குச் செல்லவேயில்லை என்றாலும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து நானும், சாட்சிகளும் கையெழுத்து செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. **Ex.P.10** அங்கீகாரக் கடிதத்தின்படி சோதனை மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல. மேல் அதிகாரியின் உத்திரவுப்படி நான் இவ்வழக்கில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/சந்திரமௌழி